வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 24.3.2024 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், லே-யில், இந்திய ராணுவ வீரர்களுடன் ஹோலிப் பண்டிகையை கொண்டாடினார்.
- கோவிட் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான இந்தியாவின் கொள்கை இன்று உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலையொட்டி, பொதுக்கூட்டங்களை நடத்துவற்கான இடங்களை தேர்தல் துறை அறிவித்துள்ளது.
- வாக்குப் பதிவு முடியும் வரை தினமும் ஒரு தேர்தல் விழிப்புணர்வு வீடியோ வெளியிட புதுச்சேரி தேர்தல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

<u>*காசநோய் தினம் (9)*</u>

உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், காசநோய் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என குறிப்பிட்டுள்ளார். காசநோயின் உலகளாவிய தாக்கம் மற்றும் நோயை கட்டுப்படுத்துவது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அதைத் தடுப்பதற்கான முன் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக இந்நாள் அமைந்துள்ளது என கூறியுள்ள அவர்,

காசநோயை முடிவுக்கு கொண்டு வருவோம் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருள் என தெரிவித்துள்ளார்.

*__ஹோலி பண்டிகை (13)__*

வண்ணங்களின் பண்டிகையான ஹோலிப் பண்டிகையை ஒட்டி, இன்று லே-யில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்திய ராணுவ வீரர்களுடன் ஹோலிப் பண்டிகையை கொண்டாடினார். இந்த கொண்டாட்டத்தின் போது ராணுவ தலைமை தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே மற்றும் ராணுவ அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர். முன்னதாக, லே-யில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். பண்டிகைகள் முதலில் நாட்டின் பாதுகாவலர்களுடன் கொண்டாடப்பட வேண்டும் என தான் நம்புவதால் ஒருநாள் முன்னதாகவே வீரர்களுடன் ஹோலி கொண்டாட முடிவு செய்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்தார். தொடர்ந்து உலகின் மிக உயரமான சியாச்சின் பகுதியில் பணியமர்த்தப்பட்டுள்ள ராணுவ வீரர்களுடன் தொலைபேசியில் ஹோலி வாழ்த்துக்களை திரு. ராஜ்நாத் சிங் பகிர்ந்து கொண்டார்.

*__நிர்மலா சீதாராமன் (13)__*

கோவிட் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான இந்தியாவின் கொள்கை இன்று உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று பெங்களூருவில் நடந்த சிந்தனையாளர்கள் மன்றத்தின் அமர்வில் உரையாற்றுகையில், அவர் இவ்வாறு கூறினார். தகுந்த மற்றும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளும், பொருளாதார சீர்திருத்தங்களும் இந்தியாவை கோவிட் நெருக்கடியில் இருந்து மீள உதவியதாகவும் மத்திய நிதியமைச்சர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், நாட்டில் தொழில்முனைவோர்,

விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் காட்டிய உறுதியின் காரணமாக இந்திய பொருளாதாரம் உடனடியாக மீண்டு தற்போது வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக உள்ளது என திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

***<u>வெங்காயம் (8)</u>***

வெங்காயம் மீதான ஏற்றுமதி தடையை மறு உத்தரவு வரும் வரை நீட்டித்து, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. உள்நாட்டில் வெங்காயம் கிடைப்பதை அதிகரிக்கவும், வெங்காயத்தின் விலையை கட்டுக்குள் வைத்திருக்க முடிவு செய்து, வெங்காய ஏற்றுமதிக்கான தடை இம்மாதம் 31ஆம் தேதி வரை செல்லுபடியாகும் என்றும் மறு உத்தரவு வரும் வரை நீட்டிக்கப்படுவதாகவும் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வெங்காய ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

***<u>பாகிஸ்தான் (6)</u>***

இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மீட்டெடுப்பது குறித்து, பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலிக்கும் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. முகமது இஷாக் தார் தெரிவித்துள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், நிறுத்தப்பட்ட இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மீட்டெடுப்பது குறித்து பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலிக்கும் என்று லண்டனில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது அவர் தெரிவித்தார்.

***<u>சக்ஷம் செயலி (11)</u>***

மாற்றுதிறனாளிகள் எளிதாக வாக்களிக்கவும், வாக்குச்சாவடிகளில் அவர்களுக்கு உரிய வசதிகளை பெறவும் தேர்தல் ஆணையம் சக்ஷம் செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது. 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் 40 சதவிகித மாற்றுத் திறனாளிகள் வீட்டிலிருந்தபடியே வாக்களிக்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இருப்பினும் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், தன்னார்வலர்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் இருப்பதை உறுதிப்படுத்தவும், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளையும் தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்து வருகிறது. இத்தகைய வசதிகளை பயன்படுத்த ஏதுவாக சக்ஷம் செயலியை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

***<u>சுகாதாரத்துறை (7)</u>***

கோடை காலத்தில் மருத்துவ மனைகளில் தீவிபத்து ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய சுகாதார அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் மருத்துவமனைகளில் எச்சரிக்கை ஒலிப்பான், தீ அணைப்பான் உள்ளிட்ட சாதனங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவற்றின் பயன்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

***<u>பொதுக்கூட்ட இடங்கள் (14)</u>***

மக்களவைத் தேர்தல் 2024 அறிவிப்பினைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் புதுச்சேரியில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் புதுச்சேரியில் பொதுக்கூட்டங்கள் நடத்த ஏதுவாக சில இடங்களை கண்டறிந்து மாவட்ட தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ளார். அதில் புதுச்சேரி நகராட்சியில் கடலூர் சாலை சிங்காரவேலர் சதுக்கம், புதிய துறைமுக வளாகம், உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானம், தாகூர் கலைக்கல்லூரி மைதானம், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஆர்.கே.நகர் விளையாட்டு மைதானம், மணவெளி மந்தை திடல் உள்ளிடட இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்த மாவட்ட தேர்தல் அதிகாரியின் முன் அனுமதி பெற வேண்டும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் பாகூர், மண்ணாடிப்பட்டு, நெட்டப்பாக்கம் மற்றும் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

***<u>விழிப்புணர்வு வீடியோ (11)</u>***

இந்தியத் தேர்தல் துறை 100 சதவிகித வாக்குப் பதிவு இலக்கினை நோக்கி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக இளைஞர்களை கவரும் வகையில், சமூக வலைதளத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டு, வாக்குப் பதிவு முடியும் வரை தினமும் ஒரு தேர்தல் விழிப்புணர்வு வீடியோ வெளியிட புதுச்சேரி தேர்தல் துறை ஏற்பாடு செய்துள்ளது. Sveep திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறையில் இளம் வாக்காளர்கள் வாக்களிக்கும் முறை, தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக 1950 என்ற எண்ணில் புகார் அளிப்பது, மாற்றுத்திறனாளிகளுக்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் அடங்கிய வீடியோக்கள் ஒன்றன்பின் ஒன்றாக

வெளியிடப்படும் என புதுச்சேரி தேர்தல் துறை செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

*குருத்தோலை ஞாயிறு (10)*

கிறிஸ்துவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 40 நாட்கள் தவக்காலம் கடைபிடிப்பது வழக்கம். சாம்பல் புதனுடன் தொடங்கும் இந்த தகவக்காலத்தின் இறுதி வாரம் புனித வாரமாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த வாரத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை, குருத்தோலை ஞாயிறாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நாளை முன்னிட்டு, புதுச்சேரியில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும், குருத்தோலை ஞாயிறு பவனி நடைபெற்றது. இதில் ஏராளமான கிறிஸ்துவர்கள் குருத்தோலையை கையில் ஏந்தியபடியும், ஓசன்னா பாடல்களை பாடிய படியும் பவனி வந்தனர். புதுச்சேரியில் உள்ள தூய இருதய ஆண்டவர் பசிலிகா, புனித ஜென்மராக்கினி ஆலயம் உள்ளிட்ட தேவாலங்களில் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது.

*தேர்தல் கிரிக்கெட் போட்டி (17)*

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, முறையான வாக்காளர் கல்வி மற்றும், தேர்தலில் பங்கெடுத்தல் எனும் sveep திட்டத்தின் கீழ், கல்லூரி பேராசிரியர்கள் இடையே முதல் முறையாக வாக்களிக்கப்போகும் கல்லூரி மாணவர்கள் நடத்திய வாக்காளர் விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி, 2 நாட்களாக நடைபெற்றது. இதில் புதுச்சேரியில் உள்ள 12 தனியார் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் கலந்து கொண்டு போட்டிகளில் பரிசு வென்றவர்களுக்கு

கோப்பைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். வாக்காளர் விழிப்புணர்வுக்காக தயாரிக்கப்பட்டுள்ள போஸ்டர்களை வெளியிட்டு, அனைவரும் வாக்களிக்கவும், அடுத்தவரை வாக்களிக்க ஊக்கப்படுத்தவும், வாக்களித்திட பணம் மற்றும் பொருட்கள் பெறுவது தவறு என்றும், தேர்தல் சம்மந்தப்பட்ட விதிமீறல்களை c-vigil செயலி மூலம் தெரியப்படுத்தலாம் என அப்போது அவர் கூறினார். உதவி மாவட்ட ஆட்சியர் திரு. யஷ்வந்த் மீனா, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

***IPL (11)***

Ipl கிரிக்கெட் தொடரில், ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி, லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியுடன் மோதுகிறது. முதலில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி, பேட் செய்ய தீர்மானித்து முதலில் களம் இறங்கியது. 20 ஓவர்களில், 4 விக்கெட் இழப்பிற்கு 193 ரன் எடுத்தது. இன்றிரவு 7.30 மணிக்கு, 194 ரன் எனும் வெற்றி இலக்கை நோக்கி லக்னோ அணி விளையாடி வருகிறது. குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெறும் ஆட்டத்தில், குஜராத் டைடன்ஸ் அணி, மும்பை இண்டியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது. நேற்று, கொல்கத்தாவில் நடைபெற்ற ஆட்டத்தில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியை 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சண்டிகரில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில், பஞ்சாப் கிங்ஸ் அணி, டெல்லி கேபிடல் அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

**<u>கியூட் (6)</u>**

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் உள்ளிட்ட, நாடு முழுவதும் உள்ள மத்திய பல்கலைக் கழகங்களில் நடத்தப்படும் இளங்கலை பாடப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கு நடைபெறும் கியூட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்க வரும் 26 ஆம் தேதி கடைசி நாள் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. மேலும் விபரங்களை தேசிய தேர்வு முகமையின் இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

**<u>நிலநடுக்கம் (4)</u>**

வடக்கு பப்புவா நியூகினியாவில் இன்று அதிகாலை சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 6.9 அளவில் பதிவான நில நடுக்கத்தால் உயிரிழிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

**<u>புவி நேரம் (8)</u>**

உலகளாவிய Earth Hour என அழைக்கப்படும் புவி நேரம் நிகழ்வின் ஒருபகுதியாக நேற்றிரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை டெல்லி, மும்பை, கொல்கத்தா, மற்றும் ஐதராபாத் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு நகரங்களில் உள்ள பொதுஇடங்கள் மற்றும் முக்கிய இடங்களில் விளக்குகள் அணைக்கப்பட்டன. எரிசக்தி சேமிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் இந்த நிகழ்வு அனுசரிக்கப்படுகிறது. டெல்லியில் புவிநேரம் காரணமாக ஒரு மணி நேரத்தில் 206 மெகாவாட் மின்சாரம் சேமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.